# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 139 /பேரூ/2026**
**நாள் : 05.08.2026**

L. பாலமுரளி,
மேட்டூர் அணை,
சேலம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வீரக்கல்புதூர் பேரூராட்சி,
சேலம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை - 3, இராமன் நகர் அஞ்சல், 5/2-57B, முருகன் நகர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. L. பாலமுரளி என்பவரது **22.05.2026** நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் **25.05.2026** அன்று பெறப்பட்டு, 139/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை -3, இராமன்நகர் அஞ்சல், 5/2-57B, முருகன் நகர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. L. பாலமுரளி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 22.05.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சியில் சர்வே எண். 172/1A2-ல் உள்ள 2 ஏக்கர் 80 செண்ட் காலி இடத்தை வீட்டு மனைகளாக பிரித்து விற்பனை செய்ய பேரூராட்சி சார்பில் அனுமதி அளிக்கப்பட்டது. அனுமதி அளிக்கப்பட்ட லே அவுட் எண். 202/2024 (வசந்தம் கார்டன்) அனுமதி அளிக்கப்பட்ட காலி மனை நிலத்தின் சாக்கடையை பஞ்சாயத்து சாக்கடை வசதியுடன் இணைக்கப்படவில்லை.

மேலும் வீட்டு மனை அமைக்கப்பட்ட இடத்திற்கு அருகில் இரயில்வே பாதை உள்ளது. இது 30 மீட்டருக்கும் குறைவாகவே உள்ளது.

ஐயா அவர்கள் இதனை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.05.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 16.06.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 96/2026-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

‘‘சேலம் மாவட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சியில் வார்டு எண்.7, சக்தி நகர் பகுதியில் கிராம சர்வே எண். 172/1A2ல் 2.8 ஏக்கர் பரப்பளவில் அமையப்பெற்ற மனைப்பிரிவானது சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கியதை தொடர்ந்து மனை பிரிவுதாரர்களால் தார் சாலைகள், தெருமின் விளக்குகள், கழிவுநீர் கால்வாய் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தியும், அவற்றை பேரூராட்சி பராமரிப்பிற்கு ஒப்படைத்தும், இப்பேரூராட்சிக்கு அரசுக்கு உரிய கட்டணங்களை செலுத்திய பின்னர் பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் (தீர்மானம் எண். 451, நாள் 27.09.2024) நிறைவேற்றப்பட்டு வீரக்கல்புதூர் பேரூராட்சி இறுதி ஒப்புதல் அனுமதி ந.க.எண். 682/2024 நாள் 10.10.2024ல் பேரூராட்சியின் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டது.

மேற்படி மனைப்பிரிவிலிருந்து கழிவுநீர் கால்வாய் வெளியேறுவதற்கு Disposal Point அமைக்கப்பட்டுள்ளது. இந்த மனைப்பிரிவிற்கு அருகில் பேரூராட்சியின் கழிவுநீர் கால்வாய் ஏதுமில்லை என்பதால் மனைப்பிரிவிலிருந்து வெளியேறும் கழிவுநீரானது பேரூராட்சி கழிவுநீர் கால்வாயுடன் இணைக்கப்படவில்லை. அப்பகுதியில் நாளதுவரை குடியிருப்புகள் ஏதும் அமைக்கப்படவில்லை. எதிர்காலத்தில் குடியிருப்புகள் அமையப்பெறும் பட்சத்தில் கழிவுநீர் கால்வாய் அமைத்து தரப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இப்பேரூராட்சி அலுவலக இளநிலை பொறியாளர் (திட்டமிடல்) அவர்கள் கள ஆய்வு மேற்கொண்டு மனைப்பிரிவின் எல்லையிலிருந்து இரயில்வே பாதையானது சுமார் 45 மீட்டருக்கு தொலையில் அமைந்துள்ளது என சான்று வழங்கியுள்ளார் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 07.07.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் ஆஜராகுமாறு 19.06.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. L. பாலமுரளி என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் 07.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- சேலம் மாவட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட புல எண் 172/1A2ல் அமையப்பெற்ற 2 ஏக்கர் 80 செண்ட் காலி மனையினை வீட்டு மனைகளாக பிரித்து விற்பனை செய்ய பேரூராட்சியால் அனுமதி அளிக்கப்பட்ட (லே அவுட் எண் 202/2024-வசந்தம் கார்டன்) மனைப் பிரிவின் கழிவுநீர் கால்வாயை பேரூராட்சியின் கழிவுநீர் கால்வாயுடன் இணைக்கப்படவில்லை. இதனால் மழைக்காலங்களில் மழை நீரானது சாலைகளில் சூழ்ந்து போக்குவரத்துக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுகிறது.

- மேற்படி வீட்டுமனை அமைக்கப்படவுள்ள இடத்திற்கு அருகில் 30 மீட்டருக்கு குறைவாக இரயில்வே இருப்பு பாதை உள்ளது.

- எனவே லே அவுட் எண். 202/2024ல் (வசந்தம் கார்டன்) பேரூராட்சியால் அனுமதி வழங்கப்பட்ட லே அவுட் அனுமதியை இரத்து செய்ய ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்' என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி இளநிலை உதவியாளர் ஆகியோர் 07.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்கு மூலத்தை அளித்துள்ளனர். அதில் –

- சேலம் மாவட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7, சக்தி நகர் பகுதியில் கிராம சர்வே எண். 172/1A2ல் 2.8 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனைப் பிரிவை 60 குடியிருப்பு மனைப்பிரிவுகளாக அமைக்க சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு துறையால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, இப்பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இப்பேரூராட்சியால் 10.10.2024 அன்று இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

- மேற்படி மனைப் பிரிவிலிருந்து கழிவுநீர் கால்வாய் வெளியேறுவதற்கு Disposal Point அமைக்கப்பட்டுள்ளது.

- மேற்காணும் மனைப் பிரிவிற்கு அருகில் பேரூராட்சியின் கழிவுநீர் கால்வாய் ஏதுமில்லை என்பதாலும் மற்றும் இப்பகுதியில் நாளது வரை குடியிருப்புகள் ஏதும் அமைக்கப்படவில்லை என்பதாலும், வருங்காலத்தில் குடியிருப்புகள் அமையப்பெற்றதும், கழிவுநீர் கால்வாய் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

- மேலும் மேற்காணும் மனைப்பிரிவில் உள்ள மனைகள் இரயில்வே பாதை எல்லையிலிருந்து சுமார் 45 மீட்டருக்கு தொலைவில் அமைந்துள்ளது. ஆனால் இங்கு அமையப்பெற்றுள்ள சுற்றுச்சுவர் ஆனது இரயில்வே பாதையின் 30 மீட்டர் தொலைவிற்குள் அமையப்பெற்றுள்ளது. இது குறித்து நேரில் ஆய்வு செய்து உரிய விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. L. பாலமுரளி என்பவர் தனது 22.05.2026 நாளிட்ட முறையீட்டு மனுவில், சேலம் மாவட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 172/1A2ல் அமையப்பெற்ற 2 ஏக்கர் 80 செண்ட் பரப்பளவு கொண்ட லே அவுட் எண். 202/2024 மனைப்பிரிவை குடியிருப்பு மனைகளாக அமைக்க பேரூராட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்காணும் மனைப்பிரிவின் கழிவுநீர் கால்வாயை பேரூராட்சியின் கழிவுநீர் கால்வாயுடன் இணைக்கப்படவில்லை எனவும், வீட்டுமனை அமைக்கப்படவுள்ள இடத்திற்கு அருகில் 30 மீட்டருக்கு குறைவாக இரயில்வே இருப்புப் பாதை உள்ளதாகவும் தெரிவித்திருப்பதை அறிய வருகிறது.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் மனைப்பிரிவை 60 குடியிருப்பு மனைப்பிரிவுகளாக அமைக்க சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு துறையால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, பேரூராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 10.10.2024 அன்று இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்டது எனவும், மேற்காணும் மனைப்பிரிவிலிருந்து கழிவுநீர் கால்வாய் வெளியேறுவதற்கு disposal point அமைக்கப்பட்டுள்ள நிலையில், மனையின் அருகில் பேரூராட்சியின் கழிவுநீர் கால்வாய் ஏதுமில்லை என்பதாலும் மற்றும் இம்மனையில் எவ்வித குடியிருப்பும் இல்லாததாலும், வருங்காலத்தில் குடியிருப்புகள் அமையப் பெற்றதும், பேரூராட்சி மூலம் கழிவுநீர் கால்வாய் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்திருப்பதை அவரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

இந்நிலையில், வீரக்கல்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 172/1A2ல் பேரூராட்சியால் அனுமதியளிக்கப்பட்ட மனையில் குடியிருப்புகள் அமையப் பெற்றதும், அம்மனைப்பிரிவுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் கால்வாயை பேரூராட்சியின் கழிவுநீர் கால்வாயுடன் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மற்றும் மேற்காணும் மனைப்பிரிவில் உள்ள சுற்றுச் சுவரானது இரயில்வே பாதையின் 30 மீட்டர் தொலைவிற்குள் அமையப் பெற்றுள்ளது குறித்து ஆய்வு மேற்கொண்டு உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. L. பாலமுரளி,
5/2-57B, முருகன் நகர், இராமன் நகர் அஞ்சல்,
மேட்டூர் அணை, சேலம் மாவட்டம்.
2. செயல் அலுவலர்,
வீரக்கல்புதூர் பேரூராட்சி, சேலம் மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer), (பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

10/8/26
செயலாளர்
10/8/26